

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.6.2024) அண்ணா அறிவாலயத்தில், மக்களவை, மாநிலங்களவை ஆகிய இரு அவைகளின் கழக நாடாளுமன்றத்தின் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள கனிமொழி கருணாநிதி, கழக மக்களவைக் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள டி.ஆர்.பாலு, கழக மக்களவைக் குழுத் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள தயாநிதி மாறன், மாநிலங்களவை கொறடாவாக நியமிக்கப்பட்டுள்ள மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், மக்களவை, மாநிலங்களவை ஆகிய இரு அவைகளின் பொருளாளராக நியமிக்கப்பட்டுள்ள எஸ்.ஜெகத்ரட்சகன் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, கழக செய்தி / தொடர்பு தலைவர் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.6.2024) பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் சிறப்பு தனிச் செயலாளர் ஆதிகேசன் – திருமதி. சாந்தி தம்பதியரின் மகள் டாக்டர். பத்மாசினி, செந்தில் குமார் – திருமதி. சாந்தி தம்பதியரின் மகன் டாக்டர். கௌரிசங்கர் ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர். க. பொன்முடி, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு. பிச்சாண்டி, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (12.6.2024) அண்ணா அறிவாலயத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள டாக்டர். ப.சேகர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர். க.பொன்முடி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டி.கே.எஸ்.இளங்கோவன் மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (12.6.2024) அண்ணா அறிவாலயத்தில், மாநிலங்களவைக் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள திருச்சி சிவா, மாநிலங்களவைக் குழுத் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள மு. சண்முகம், மாநிலங்களவை கொறடாவாக நியமிக்கப்பட்டுள்ள பி. வில்சன் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.6.2024) அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் மாநிலத் தலைவர் ஏ.எம். விக்கிரமராஜா, பொதுச் செயலாளர் கோவிந்தராஜுலு, பொருளாளர் சதகத்துல்லா ஆகியோர் சந்தித்து, நாடாளுமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி 40–க்கு 40 தொகுதிகளிலும் மாபெரும் வெற்றி பெற்றதற்கு வாழ்த்துத் தெரிவித்தார்கள்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (12.6.2024) அண்ணா அறிவாலயத்தில் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள அன்னியூர் சிவா, விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள டாக்டர். தெ. கௌதம் சிகாமணி ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்வின்போது, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர். க.பொன்முடி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, தயாநிதி மாறன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.6.2024) அண்ணா அறிவாலயத்தில், மக்கள் விடுதலை கட்சி தலைவர் முருகவேல் ராஜன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, நாடாளுமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி 40க்கு–40 தொகுதிகளிலும் மாபெரும் வெற்றி பெற்றதையொட்டி வாழ்த்து தெரிவித்தனர்.



சென்னை, இராஜா அண்ணாமலை மன்றத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில் திறந்து வைக்கப்பட்டுள்ள ‘காலம் உள்ளவரை கலைஞர்’ நவீன தமிழகத்தின் சிற்பிக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க நவீன கண்காட்சியகத்தை கவிப்பேரரசு வைரமுத்து நேரில் சென்று பார்வையிட்டார்.


### தமிழ்நாட்டுடனான நட்பை வலுப்படுத்த ஆர்வமுடன் எதிர்நோக்கியுள்ளேன்!

# ஆந்திரம் உங்கள் தலைமையில் வளம்பெறட்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - ஆந்திர முதல்வராகப் பொறுப்பேற்ற சந்திரபாபு நாயுடுவுக்கு வாழ்த்து!

சென்னை, ஜூன் 13 -

ஆந்திர மாநில முதலமைச்சராக நேற்று பொறுப்பேற்ற சந்திரபாபு நாயுடுவுக்கு, முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ள வாழ்த்துச் செய்தியில் ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு இடையிலான நட்பையும், கூட்டுறவையும் வலுப்படுத்த ஆர்வமுடன் எதிர்நோக்கியுள்ளேன் என்றும், உங்கள் தலைமை ஆந்திரத்துக்கு வளத்தையும், நலத்தையும் கொண்டு வரட்டும் எனவும் தெரிவித்துள்ளார்.



ஆந்திர பிரதேச மாநில முதலமைச்சராக நான்காவது முறையாகப் பொறுப்பேற்றிருக்கும் சந்திரபாபு நாயுடு அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு:-

**ஆந்திர பிரதேச மாநில முதலமைச்சராக நான்காவது முறையாகப் பொறுப்பேற்றிருக்கும் என்.சந்திரபாபு நாயுடு அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகள்.**

**உங்களது தலைமை ஆந்திரத்துக்கு வளத்தையும் நலத்தையும் கொண்டுவரட்டும். இருமாநில முன்னேற்றத்துக்காக, ஆந்திர பிரதேசம் மற்றும் தமிழ்நாடு இடையேயான நட்பையும் கூட்டுறவையும் வலுப்படுத்த ஆர்வமுடன் எதிர்நோக்கியுள்ளேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### தமிழ்நாடு பதிவெண் இல்லாத

# ஆம்னி பேருந்துகளுக்கு 14ம் தேதி முதல் தடை !

## போக்குவரத்துத் துறை அறிவிப்பு!

*சென்னை, ஜூன் 13-*

*தமிழ்நாட்டில் ஓடும் கணிசமான ஆம்னி பேருந்துகள் தமிழக பதிவெண்ணுடன் இருப்பதில்லை. கர்நாடகா, புதுச்சேரி, அஸ்ஸாம் உள்பட வேறு மாநிலங்களில் பதிவு செய்து தமிழ்நாட்டில் ஓடுகிறது. இப்படி வெளிமாநில பதிவெண் கொண்ட 652 ஆம்னி பேருந்துகளால் ஆண்டொன்றுக்கு தமிழக அரசுக்கு ரூ.28.16 கோடி இழப்பு ஏற்படுகிறது. வெளி மாநில பதிவு எண் கொண்ட பேருந்துகளை தமிழகப் பதிவு எண்ணாக மாற்ற வேண்டும் என்று அரசு வலியுறுத்தி வருகிறது.*

*இதற்கிடையே ஆம்னி பேருந்துகள் சங்கத்தினர் கோரியதை அடுத்து பதிவெண் மாற்றுவதற்கான அவகாசத்தை அரசு நீட்டித்து வந்தது. இந்நிலையில் தமிழ்நாடு பதிவெண் இல்லாத ஆம்னி பேருந்துகளுக்கு இனி அனுமதி இல்லை என அரசு போக்குவரத்துத் துறை அறிவித்துள்ளது.*

*இதுகுறித்து வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:- இனி உரிய தமிழக பதிவெண் இல்லாமல், தமிழ்நாட்டின் அனுமதிச் சீட்டு பெறாமல் உள்ள ஆம்னி பேருந்துகள் வரும் ஜூன் 14ம் தேதி முதல் மாநிலத்தில் இயங்க அனுமதி இல்லை*

*எனவே முறையற்ற வகையில் வெளி மாநிலங்களில் பதிவு செய்து இயங்கும் வெளி மாநில பதிவெண் கொண்ட ஆம்னி பேருந்துகளில் இனி பயணிகள் பயணம் செய்வதை முற்றிலும் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மீறி பயணம் செய்தால் அரசு அதற்கு பொறுப்பேற்காது. மேலும் பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்கு அந்தந்த ஆம்னி பேருந்து உரிமையாளர்களே முழு பொறுப்பு ஏற்க நேரிடும். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*